முதன்மை மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்.
முன்னிலை: திரு.டி. கிங்ஸ்லி கிறிஸ்டோபர், எம்.ஏ., எம்.எல்.,
முதன்மை மாவட்ட நீதிபதி.
2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01ஆம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, ஸ்ரீ சுபகிருது வருடம், ஆனித்திங்கள் 17ம் நாள்

**இடைநிலை மனு எண் 02/2022ல்**
**அசல் வழக்கு எண். 03/2018**

1. ரிச்சர்டு,
2 பன்னீர், ... மனுதாரர்கள்/ 7,8 பிரதிவாதிகள்

-எதிர்-

1. சின்னையா உடையார் சமாதி தர்மம் மற்றும்
வேளாங்கண்ணி திருவிழா அன்னதான தர்மம்
அதன் டிரஸ்டி மார்ட்டின் செல்வம் மூலமாக,
2. மார்ட்டின் செல்வம், ... எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இம்மனு என் முன்பாக 24.06.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர்.ஸ்ரீபால் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.குணசேகரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பகரும்............

**உத்தரவு**

இம்மனுவின் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 07.06.2019 தேதியில் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்து மனுதாரர்களின் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கினை மேல்நடத்த உத்தரவிட வேண்டுமென்று கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:**

அ) இந்த மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கின் 7,8 பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கினை எதிர்மனுதாரர்கள் தவறான தகவல்களின் அடிப்படையில் கெட்ட எண்ணத்துடன் தாக்கல் செய்துள்ளனர். அசல் வழக்கினை மனுதாரர்கள் சேர்ந்து நடத்தி வருகிறார்கள். 1வது மனுதாரர் அவரது பணிநிமித்தம் அடிக்கடி வெளியூரில் இருந்துவருவதால் அவரது சார்பில் 2ம் மனுதாரர்

D KINGSLY CHRISTOPHER
Digitally signed by D KINGSLY CHRISTOPHER
Date: 2022.07.01 17:38:14 +0530

நடத்தி வருகிறார் என்றும், அசல் வழக்கில் மனுதாரர்கள் வழக்கறிஞர் மூலம் ஆஜரானபோதிலும், வாதி தாக்கல் செய்துள்ள வழக்கின் ஆவண விபரங்கள் குறித்து அவற்றின் நகல்வேண்டி விண்ணப்பித்திருந்தோம். இந்நிலையில் மனுதாரர்கள் காலத்தில் எதிருரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்கள் மீது எக்ஸ்பார்ட்டி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நகல் கிடைக்க காலதாமதம் ஆன நிலையில் கொரானா தீ நுண்மி காரணமாக லாக்டவுன் அறிவிக்கப்பட்டதால் வேளாங்கண்ணி கிராமத்தைவிட்டு வெளியூரிலேயே வசித்து வரவேண்டிய சூழ்நிலை காரணமாக அசல் வழக்கிற்கான எதிர்வழக்குரையை காலத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை. மனுதாரர்கள் வேண்டுமென்றே அலட்சியமாகவோ, அசல் வழக்கிற்கு எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை. தற்போது அசல் வழக்கிற்கான மனுதாரர்களின் எதிர் வழக்குரையை இம்மனுவுடன் தாக்கல் செய்திருக்கிறோம். மனுதாரர்கள் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்து மனுதாரர்களின் எதிர் வழக்குரையை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கினை மேல்நடத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், கஷ்ட நஷ்டமும் எற்படும். ஆகவே, மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 07.06.2019 தேதியில் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்து மனுதாரர்களின் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கினை மேல்நடத்த உத்தரவிட வேண்டுமென்று கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து, 1ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>**

(அ) இம்மனு சட்டப்படியும் உண்மை நிலவரப்படியும் நிலைநிற்க கூடியதல்ல. மனுதாரா்கள் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ள விபரங்களை மனுதாரா்களே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். அசல் வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்ததனால் சமூகம் நீதிமன்றத்தில் கடந்த 07.06.2019 தேதியில் ஒருதலைபட்சமாக தீர்மானித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/7,8 பிரதிவாதிகளுக்கு அசல் வழக்கில் நியாயமான கட்சியும், வெற்றி வாய்ப்பும் இல்லையென்பதால்

D KINGSLY CHRISTOPHER
Digitally signed by D KINGSLY CHRISTOPHER
Date: 2022.07.01 17:38:26 +0530

வேண்டுமென்றே எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு பின்னிட்டு பொய்யான காரணங்களை முன்னிறுத்தி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். இது சட்டப்படி ஏற்புடையதல்ல. ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டு ஏற்பட்ட உத்தரவில் இருந்து இம்மனு தாக்கல் செய்துள்ள நாள்வரை ஏற்பட்ட ஒவ்வொரு நாட்களுக்கான காரணத்தை ஆவணங்கள் வழி நிரூபணம் செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும். மனுதாரர்கள் தெரிவித்துள்ள காரணங்கள் சட்டப்படி ஏற்புடையதல்ல. அசல் மனுவை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினையாகும்.

**5. தீர்வு:**

அ) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் 1வது மனுதாரர் அவரது பணிநிமித்தம் காரணமாக அடிக்கடி வெளியூரில் இருந்துவருவதால் அவரது சார்பில் 2ம் மனுதாரர் வழக்கை நடத்தி வந்தார் என்றும், அசல் வழக்கில் மனுதாரர்கள் வழக்கறிஞர் மூலம் ஆஜரானபோதிலும், வாதி தாக்கல் செய்துள்ள வழக்கின் ஆவண விபரங்கள் குறித்து அவற்றின் நகல்வேண்டி விண்ணப்பித்திருந்ததால், மனுதாரர்களால் உரிய காலத்தில் எதிருரை தாக்கல் செய்ய இயலவில்லை என்று மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. மனுதாரர்/பிரதிவாதிக்கு வழக்கில் ஆஜராகி அவரது தரப்பு கட்சியை எடுத்துரைக்க வாய்ப்பளித்து விரைவான விசாரணையை நடத்தி சரியான முடிவுக்கு வருவதுதான் நீதிக்கு உகந்ததாகும். ஆகவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக

D KINGSLY CHRISTOPHER

Digitally signed by D KINGSLY CHRISTOPHER
Date: 2022.07.01 17:39:00 +0530

கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2022ம் ஆண்டு ஜுலை மாதம் 01ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D KINGSLY CHRISTOPHER

Digitally signed by D KINGSLY CHRISTOPHER
Date: 2022.07.01 17:39:28 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
நாகப்பட்டினம்.

பின் இணைப்பு :- இல்லை

D KINGSLY CHRISTOPHER

Digitally signed by D KINGSLY CHRISTOPHER
Date: 2022.07.01 17:39:46 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
நாகப்பட்டினம்.